

THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 24 மார்ச் 2024 கனி 4

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலே செயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST




ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 51
தலைப்பு : பிரபஞ்சம் - World
வேத வாசிப்பு : 1கொரிந்தியர் 2:1-10




1. பிரபஞ்ச கவலை - லூக்.8:14
2. இப்பிரபஞ்சத்தின் தேவன் -2கொரி.4:4
3. இப்பிரபஞ்சத்தின் ஞானத்தை அல்ல - 1கொரி.2:5,6


மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041




India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



Contact Us: 6379350509



## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: Six Days of the Week

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Thursday, Friday & Saturday 6.00 P.M on Heaven TV*

YouTube : the word of christ









**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 மார்ச் -2024 கனி - 4


ஆசிரியருரை

## வாக்குத்தத்தம்

Promise



**க**ர்த்தருடைய வாக்குத்தத்தமானது "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்" என அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.2:25). இந்த வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தை நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் பெற்றுக்கொள்ளுகிறோம். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் சொல்லும்போது; "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றான் (யோவா.3:36).

நாம் இயேசுவை விசுவாசிப்போமென்றால் நித்திய ஜீவனை உடையவர்களாகவும் அந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாகவும் இருப்போம். அநேகர் அவரை விசுவாசிக்கும்படியாக அவர் யார்? அவரை நான் ஏன் விசுவாசிக்கவேண்டும் என்ற கேள்வியோடிருக்கின்றனர். மனிதனை பாவத்திலிருந்து மீட்டு நித்தியமான ஆசீர்வாதங்களை கொடுக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. இவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் நித்திய வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். விசுவாசியாதவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறமுடியாது, தேவனுடைய கோபம் அவர்கள்மேல் நிலைநிற்கும். எனவே இயேசுவானவர் சொல்லும்போது; "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா.5:24).

இந்த வாக்குத்தத்தமான நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நமக்கு இருக்கவேண்டியவை, ஒன்று விசுவாசம் மற்றொன்று பொறுமை. இந்த இரண்டையும் பெற்றிருந்த நம்முடைய முற்பிதாக்களை நாம் நோக்கிப்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். "நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து" என எபிரெய

நிருபத்தில் வாசிக்கிறோம் (எபி.6:11). விசுவாசம் ஒவ்வொரு மனிதனுக்கும் அடித்தளமாக அமைகிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாய் இருப்பது கூடாத காரியம். "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளாதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" (எபி.11:7). ஒரு துளியும் மழையில்லா காலத்தில் தேவனுடைய எச்சரிப்பைப் பெற்று நோவா கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையை உண்டுபண்ணினான். அது அவனுடைய விசுவாசமாயிருந்தது. தேவன் சொல்லியபடி செய்வார் என்ற ஆழமான நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. அதினாலே அவனுடைய குடும்பம் இரட்சிக்கப்பட்டது. இன்றைக்கு நாமும் இவ்விதமான விசுவாசத்தோடு இருப்போமானால் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுவோம்.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" (எபி.11:8). விசுவாசம் என்பது காணாததை நம்புவதே விசுவாசம். ஒரு அடி நிலம் கூட அவனுடைய கையாட்சிக்கு கிடைக்காதபோது அவனுக்குள் தேவன் சிறப்பான தேசத்தைக் கொடுப்பார் என்ற அசையாத நம்பிக்கை இருந்தது. இதுவே விசுவாசம். இந்த விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது ஆபிரகாமின் குமாரரும் குமாரத்தியுமாயிருப்பீர்கள். "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி.11:24-26).

இராஜ வாழ்க்கையை ஒருவரும் புறம்பே தள்ளமாட்டார்கள். ஆனால் தான் யார் என்பதை அறிந்த மோசே பார்வோனுடைய ராஜ அரண்மனை வாழ்க்கையை விரும்பாமல் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிக்கும்படியாக சேர்ந்துகொண்டான். நல்லவழ்க்கை கிடைத்திருக்கும்போது கடினமான வாழ்வை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் மோசேயோ, அந்தவிதமான வாழ்க்கைதான் தனக்கு தேவை, என் ஜனங்கள் துன்பப்படும்போது தான் மட்டும் சுகபோகமாக வாழ்வதா? என்ற கேள்வி அவனுக்குள் எழும்பியிருக்கும். அன்பானவர்களே, நீங்கள் என்றாவது தேவனுடைய ஜனங்கள் துன்பப்படுவதை கேள்விப்பட்டு, உங்களால் முடிந்து உதவியை செய்யும்படியாக யோசித்ததுண்டா? நாம் அநேக வேளைகளில் தனக்கானவைகளையே நாடுகிறோம். பிறருக்கானவைகளையும் நோக்கவேண்டும் என வேதம் சொல்லுகிறது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நாம் தியானித்த இந்த மோசேயைப்போலவும், ஆபிரகாமைப்போலவும், நோவாவைப்போலவும் விசுவாசமுள்ளவர்களாயிருந்து தேவனுடைய ராஜ்யத்தில் அதிக கனிகளைக்கொடுக்கும் கிறிஸ்தவர்களாக வாழும்படியாக உங்களை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள். வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப்

பெறவேண்டுமானால் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொண்ட நம்முடைய முற்பிதாக்களை நோக்கிப்பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. காலம் தாழ்த்தாமல் இன்றே கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் இந்தவிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நமக்கு பொறுமை அவசியமாயிருக்கிறது. பொறுமை எவ்வளவு காலத்திற்கு என்று கேட்டுவிடாதீர்கள். "சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்கிறார் யாக்கோபு (யாக்.5:7,8). பொறுமைக்கு எல்லையில்லை எல்லாவற்றிற்கும் எல்லையுண்டு ஆனால் பொறுமைக்கு எல்லையில்லை எனக்காண்கிறோம். ஒன்று கர்த்தர் வருமளவும் பொறுமையாயிருந்தால் போதும். ஒரு நல்ல உதாரணத்தை யாக்கோபு நமக்கு எடுத்துரைக்கிறார். ஒரு விவசாயி எப்படி தான் விதைத்த பலனைப்பெறும்படி பொறுமையோடே காத்திருக்கிறானோ அதைப்போல நாமும் காத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்படி காத்திருக்கும்போது வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை தேவனுடைய கரத்தில் பெற்றுக்கொள்ளுவோம்.

பொறுமைக்கு மேலும் உதாரணமாக யாக்கோபு தீர்க்கதரிசிகளை திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள் என்கிறார். "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" (யாக்.5:10). நாம் யாரை நம்முடைய பொறுமைக்கு உதாரணமாக வைத்திருக்கிறோம். நம்முடைய உறவினர்களையா அல்லது நண்பர்களையா? அநேகர் பேசும்போது என்னுடைய மாமாவைப்போல நானும் பொறுமையாயிருப்பேன் என்பார்கள். அவர்களுடைய மாமா ஒரு பொல்லாத மனுஷனாக இருப்பார். கொஞ்சம் பொறுமைசாளியாக இருக்கலாம். அதற்காக அவரை நாம் உதாரணமாக வைக்க முடியாது. ஒருவேளை என்னுடைய நண்பன் எல்லாவிதத்திலும் பொறுமையானவன் என்று சொல்லலாம். அவனைக்குறித்து நாம் கேள்விப்பட்டால் அவனைப்போல ஒரு மோசமானவன் எவனுமில்லை என்று மற்றவர்கள் சொல்லக்கேள்விப்படுவீர்கள். ஆகையால் நாம் யாரைத்தான் பொறுமைக்கு உதாரணமாக வைப்பது? வேதம் தீர்க்கதரிசிகளை பொறுமைக்கு உதாரணமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று நமக்கு ஆலோசனை சொல்லுகிறது. ஏசாயா, ஏரேமியா, தானியேல், ஆமோஸ் யோவான்ஸ்நானகன் போன்ற தீர்க்கதரிசிகள் எல்லோரும் கர்த்தர் நிமித்தமாக பலபாடுகளை அநுபவித்தவர்கள்.

மேலும் யாக்கோபு சொல்லும்போது; "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே? யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே" என்கிறான் (யாக்.5:11). யோபுவுக்கு வந்த பாடுகள் பிரச்சனைகள் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை என்றே சொல்லவேண்டும். அத்தனை பாடுகளை அநுபவித்தார். ஒரு மனிதனுக்கு மிகவும்

துணையாக இருப்பது அவனுடைய மனைவி மட்டுமே. ஆனால் யோபுவின் மனைவியோ அவனைப்பார்த்து நீ இன்னும் உன்னுடைய உத்தமத்தில் உறுதியாயிருக்கிறீரோ, தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். ஏன் இப்படிச் சொன்னாள்? யோபுக்கு அந்தவிதமான பாடுகள் வந்தது! இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கும் அந்த கர்த்தரை நீ ஏன் ஆராதிக்கிறாய், அவரை தூஷித்து உயிரை விட்டுவிடு என்பதாய் சொன்னாள்.

அதற்கு யோபுவின் பதில் என்ன? பயித்திக்காரிபேசுகிறதுபோல பேசுகிறாய், இவ்வளவு காலமாக நாம் நன்மைகளைப் பெற்று இருக்க அவருடைய சமுகத்தில் தீமைகளையும் பெறவேண்டாமோ? என்றான். கஷ்டகாலத்தில் கர்த்தரை மறந்துவிடுவார்கள் ஆனால் யோபு, தேவனுடைய சமுகத்தில் நன்மைகளைப் பெற்ற நாட்களை துன்பத்தின் வேளையில் நினைத்தான். இது வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க போதுமான விசுவாசமாயிருந்தது. இப்படிப்பட்டவிசுவாசத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள யோபுவைப்போல உங்களுக்கு வரக்கூடிய பாடுகளிலும் பிரச்சனைகளிலும் அவனுடைய பொறுமையை நினைத்துப்பாருங்கள்.

"நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் எபி.10;36-ம் வசனம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் அசதியாயிராமல் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கெள்ளுகிற ஆதி முற்பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய மனுஷர்களையும் நோக்கிப் பார்த்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**தேவன் கொடுக்கிற நித்திய ஜீவனுக்குரிய வாழ்வு எவரிடம் உள்ளது?**

"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என 1யோவா.5:11,12-ல் வாசிக்கிறோம். ஜீவன் இல்லாதவன் என்றால் உயிர் இல்லாதவன். நீங்கள் ஜீவனுள்ளவர்களாயிருக்க விரும்பினால் கர்த்தராகிய இயேசுவை உங்களுடைய சொந்த இரட்சகராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, நீங்கள் அவருடைய சுவிசேஷ வசனத்திற்குச் செவி கொடுத்து, அதற்குக் கீழ்ப்படிந்து, அவரை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உங்களுடைய வாயினாலே அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார். நீங்களும் அவருடையவர்களாவீர்கள்.

ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருக்கும்போது பழையவைகள் ஒழிந்துபோகிறது, அவனுடைய வாழ்க்கையில் எல்லாம் புதிதாகிறது. அவன் ஒரு புது சிருஷ்டியாக காணப்படுவான். அப்பொழுது அவனுக்குள் கிறிஸ்துவானவர் வந்து வாசம்பண்ணுவார். அவன் ஒரு கிறிஸ்தவனாக கிறிஸ்துவை தன்னுடைய சரீரத்தில் தரித்தவனாகிறான். இவர்களே குமாரனை உடையவர்கள். நீங்கள் இப்படிப்பட்டவர்களாயில்லாவிட்டால் இன்றே உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

Why We Have Vocal Music Only In Worship *J.C.Choate*



**கி**றிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினால் மட்டுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் பிரியமுள்ளதாயிருக்கும்?

எபிரெய எழுத்தர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது

பாடிக்கொண்டு, அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக் கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது. அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக் கின்றது, பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா? ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால் தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறோனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்றஅவர்கள் கொண்டுவரவேண்டுமென

நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன். நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது, உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், "..நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது?

ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார் மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன? வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள்

மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டதில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிறகு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந் தார்கள்" (அப்.16:26) என்று சொல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" (யாக்.5:13) என்றான்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் "அவர்கள் தேவனுடைய

ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் யோவான் பரலோகத்தில் எவ்வாறு சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, "...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது" (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். "..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே..." (வெளி.4:2,3).

இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷ பாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போமா அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமா அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது.

ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிப்பதற்காக நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும். நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்....." (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

ப.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters

37




## பரிசுத்த வேதாகமத்தில் எஸ்றா
## Ezra In The Holy Bible

1. பெர்சியா ராஜாவின் காலத்தில் பாபிலோனிலிருந்து வந்த ஒரு ஆசாரியன் ஆரோனின் கொள்ளுபேரன் - எஸ்றா 7:1
2. எருசலேமில் எபிரெய எழுத்துக்களுக்குப் பதிலாக கல்தேய எழுத்துக்களைப் படிப்பித்தான்
3. நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகன் - எஸ்றா 7:6
4. வேதத்தை ஆராயவும், நீதிநியாயங்களை உபதேசிக்கவும் தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான் - எஸ்றா 7:10
5. தேவன் பெர்சியா ராஜாவுக்கு ஆலோசனை கொடுத்தார். அதற்காக ஸ்தோத்திரம் செலுத்தினான் - எஸ்றா 7:11
6. அறிக்கையிட்டு அழுது ஜெபித்தான் - எஸ்றா 9:15
7. சிறையிருப்பிலிருந்து வந்தவர்களை அழைத்தான் - எஸ்றா 10:7
8. மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசித்தான் - நேகே.8:1
9. தரியு ராஜாவின் கட்டளை - எஸ்றா 6:10
10. எங்கள் பிதாக்கள் தேவனுக்கு கோபம் மூட்டினபடியால் அவர் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்தில் ஒப்புக்கொடுத்தார் - எஸ்றா 5:12

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***ஏந்த ராஜாவின் காலத்தில், ஏந்த மாதத்தில் மீண்டும் ஆலயம் கட்டிமுடிந்ததாக எழுயிருக்கிறது?***

**விடை:** தரியு, ஆதார் மாதம் - "ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருஷம் ஆதார் என்னும் மாதம் மூன்றாந்தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிந்தது" (எஸ்றா 6:15)



புு.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters

38



## பரிசுத்த வேதாகமத்தில் பவுல்
## Paul In The Holy Bible

1. யூதன் சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்தில் பிறந்தவன் - அப்.22:3
2. கர்த்தருடைய மார்க்கத்திற்கு விரோதமாக சவுலாக இருந்த நாட்களில் செயல்பட்டவன் - அப்.9:1
3. முதற்பெயர் சவுல். கர்த்தர் அவனை சந்தித்தார் - அப்.9:3
4. அனனியா மூலமாக ஞானஸ்நானம் பெற்றான் - அப்.9:17
5. யூதர்கள் அவனை கொலைசெய்ய ஆலோசனை - அப்.9:22
6. பவுல் சிறைச்சாலையில் ஊழியம் - அப்.16:21
7. அநேகந்தரம் மரண அவஸ்தையில் அகப்பட்டவன் - 2கொ.11:23
8. சபை பிரிவினையை எதிர்த்தார் - 1கொ.1:9
9. பவுலுக்கு அநேக உடன்வேலையாட்கள் - ரோம.16:3
10. தனக்காக ரோமாபுரியில் வீடு வாடகைக்கு எடுத்து அங்கு வந்த யாவருக்கும் சுவிசேஷம் - அப்.28:16

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**பவுலுடைய சகோதரியின் மகன் பெயர் என்ன?**

**விடை:** ஏரோதியோன் - "என் இனத்தானாகிய ஏரோதியனை வாழ்த்துங்கள்" (ரோம.16:11)



பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து, நித்திய பலி

## Jesus Christ, the Eternal Sacrifice

### பண்டிகைகளின் நோக்கம் – The Purpose of the Feasts

-Betty




பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து யாத்திராகமத்திற்கும் தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி.11:26).

**கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்**

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்...." (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன்

உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில், தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் "…..அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினைக் தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

## உடன்படிக்கையின் அப்பம்

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது…"(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம் அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1கொரி.11:28,26).

(4) "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ...." (யோவா.6:54).

(5) "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்" (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு "சடங்காக" நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**



## எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!!

## How Good! How Pleasant!!

*J.Gloryarjunan*

எத்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ள வர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்டபடி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தியிருக்கிறாள்.

அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை. அநேகர் மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கர்த்தர், "எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்" என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகோதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய் வாழாமல் கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:50). இந்த வசனத்தின்படி வாழுவோம் இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

பாருங்கள், எலிசபெத்து மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்'' (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக்கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள்.

அது மாத்திரமல்ல, ''மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்'' (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள் அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறாள். ''என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்;'' (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டாள் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ்செல்லாததா யிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காகவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேகமாக ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!

## வேத அறிவுப்போட்டி எண் 280 ன் விடைகள்

1. சிதறிப்போகும் - சகரி.13:7
2. அப்பத்தையும், மீனையும்- யோவா.21:13,14
3. என்னுடையவர்களாயிருப்பார்கள் - மல்.3:17
4. பேதுரு - அப்.10:15
5. யோசேப்பை - ஆதி.42:11
6. ஆம் - ரோம.13:1
7. ஏழாம்நாள் - யாத்.24:16
8. பரிசுத்த ஆவியினுடைய - 1கொ.6:19
9. சிறுமைப்படுத்த வேண்டாம்- லேவி.19:33
10. தேவனுக்காக - 2கொரி.5:13

## வேத அறிவுப்போட்டி எண் 281 ன் விடைகள்

1. மோசே - உபா.1:31
2. தம்மைத்தாமே - கலா.1:4
3. யோசுவா - யோசு.6:2
4. இரக்கத்தில் - எபே.2:4
5. இஸ்ரவேலர் - நியா.8:27
6. இயேசு கிறிஸ்துவுக்கு - பிலி.2:11
7. ஞானதிருஷ்டிக்காரன் - 1சாமு.9:9
8. கொலோசெய நிருபம் - கொலோ.4:15
9. தாவீது - 2சாமு.6:14
10. வெளிச்சத்தின், பகலின் - 1தெச.5:5

## வேத அறிவுப்போட்டி எண் 280 ல் வெற்றிபெற்றவர்கள்

1.A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
2.Mrs.பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
3.Mrs.பாலின் மார்ட்டின் - காரைக்குடி
4.Mrs.லலிதாபேவின்சன் - காரைக்குடி
5.Mrs.ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
6.S.சாந்தகுமாரி - நாசரேத்
7.R.ஞானசிரோன்மணி- சமையநல்லூர்
8.K.M.சாந்தி - எம்.வாடிப்பட்டி
9.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
10.Mrs.ரூபவல்யா - நாசரேத்
11.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
12.M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
13.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
14.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
15.E.அதிசயம் - பனைகுடி
16.Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
17.A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
18.Mrs.S.ஃபிளோரன்ஸ்சீத்தர் - சென்னை
19.S.ஹோசியாஹரிராகவன் - வேப்பம்பட்டு
20.P. சந்திராடேனியேல் - திருநெல்வேலி
21.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
22.D.விஜயகாந்தா - வேலூர்
23.A.ஜான்தங்கராஜ் - புதுச்சேரி
24.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
25.J.பிச்சை - விருதுநகர்
26.Mrs.பாலின்டேனியேல் - சென்னை
27.Mrs.மேரிநிர்மலா - மதுரை
28.J.மேரிஜெயக்குமாரி - மதுரை
29.Sis.ஃபுளோராசுந்தர் - மதுரை
30.S.அசோக்குமார் - தூத்துக்குடி
31.Mrs.ஜான்சி - ஆனைமலை
32.Mrs.நவரத்தினம் - நாசரேத்
33.Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
34. S.ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்

## வேத அறிவுப்போட்டி எண் 281 ல் வெற்றிபெற்றவர்கள்

1. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
2.Mrs.ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
3.Mrs.பியூலா ஜேசுராஜ் - புதுச்சேரி
4.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
5.Mrs.பாலின் மார்ட்டின் - காரைக்குடி
6.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
7.ஜெயாபாணிஜெபராஜ் - சென்னை
8.D.அன்புகமலம் - காரைக்குடி
9.Mrs.ஜெயசீலிஜெயக்கொடி - திருச்சி
10.V.C.ரூப் (Rub) - தூத்துக்குடி
11.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
12.S.சாந்தகுமாரி - நாசரேத்
13.J.செல்வராஜ் - தூத்துக்குடி
14.K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
15.R.ஞானசிரோன்மணி- சமையநல்லூர்
16.J.பிச்சை - விருதுநகர்
17.B.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
18.S.ஃபிளோரன்ஸ்சீத்தர் - சென்னை
19.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
20.S.அசோக்குமார் - தூத்துக்குடி
21.Mrs.பாலின்டேனியேல் - சென்னை
22.J.மேரிஜெயக்குமார் - மதுரை
23.Sis.ஃபுளோராசுந்தர் - மதுரை
24.Mrs.மேரிநிர்மலா - மதுரை
25.J.ஜான்சி - ஆனைமலை
26.Mrs.சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
27.S.செல்வராஜ் - திருநெல்வேலி
28.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
29.E.அதிசயம் - பனைகுடி
30.Mrs.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
31.K.M.சாந்தி - எம்.வாடிப்பட்டி
32.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
33.Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி

## தேவ அன்பு
The Love of God





மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தில் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

கிறிஸ்தவனுடைய இருதயத்திற்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

# நடப்புச் செய்திகள்


நடப்பு நிதியாண்டில் 50,000 பாசன மின் இணைப்புகள் வழங்கப்படும்.

மக்களுக்கும் அரசுக்குமான பாலம் காவல்துறை என முதல்வர் கூறியுள்ளார்.

இந்திய மகளிர் கால்பந்து அணிக்கு தமிழக விவசாயி மகள் தேர்வு.

நன்றி - Way2news

**ஜெபியுங்கள்**



- ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள மக்களவை தேர்தலுக்காக...
- நம் இந்திய தேசத்திற்கு ஒரு நல்ல பிரதமர் தேர்வுசெய்யப்பட...
- தேவனுடைய ஜனங்கள் காக்கப்பட...
- வாசகர்களுக்காகவும் அவர்களுடைய குடும்பங்களுக்காகவும்...
- ஜனவரி 12ம் தேதி சாந்தி என்ற நமது வாசகரை நாம் இழந்துள்ளோம் அவர்களுடைய குடும்ப ஆறுதலுக்காக...

சிறுவர் பகுதி

# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைத் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் தூரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துப்பயன் படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா4:24)**

1. Place of Publication - Batlagundu.
2. Periodicity of its Publication - Monthly.
3. Printer`s Name - R.Sathiyamoorthi
4. Address - 14/13/24 Melamanthai St
Batlagundu -624 202,
Dindigul Dt, Tamilnadu.
5. Whether citizen of India - Yes.
6. Publisher`s Name - B.Arjunan
7. Address - 17/2/102 D/5 Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dt., Tamilnadu.
8. Editor`s name - B.Arjunan
9. Address - 17/2/102 D/5 Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dt., Tamilnadu.

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date::29.02.2024 Signature of Publisher.

# ஆசிரியர் கடிதம்...

வாசகர் அனைவருக்கும் வல்ல ஆண்டவர் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

நீங்கள் அனைவரும் சுகமாக இருப்பீர்கள் என கர்த்தருக்குள் நம்பிக்கையாக இருக்கின்றோம். ஒவ்வொரு மாதமும் **'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'** மாத இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வூழியம் வளர்ந்து பெருக நீங்கள் உங்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இவ்விதழை கொடுத்து கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், அவருடைய சுத்த சுவிசேஷம் எல்லாருக்கும் சென்றடையவும் உதவிடுங்கள்.

எங்களோடு இணைந்து சுவிசேஷ பணிசெய்ய சுவிசேஷகர்கள் யாரையும் அன்புடன் அழைக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அவருடைய பணி சிறக்க நாங்கள் அநுதினமும் ஜெபித்து வருகிறோம். இப்பணியில் இணைய விரும்புகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் நாங்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம்.

**நன்றி ஆசிரியர்.**

**63793 50509**

## வேத அறிவுப் போட்டி எண்: 283

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. வழியில் சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும்படிக்கு நான் ராஜாவினிடத்தில் சேவகரையும் குதிரைவீரரையும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன் என்பவன் யார்?
2. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. தன் வஸ்திரத்தை உதறிப்போட்டு, இப்படி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து தேவன் உதறிப்போடக் கடவர் என்றவன் யார்?
4. பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மைசெய்து சமாதானத்தைத் தேடி அதை என்ன செய்யக்கடவன்?
5. தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் தெரிவிக்க வேண்டாமென்று யார் யாருக்கு கற்பித்திருந்தான்?
6. கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி எப்படியிருக்கவேண்டும்?
7. என் வாய் என் கையை முத்திசெய்ததுண்டானால் இதுவும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும் என்பவன் யார்?
8. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் ஏனெனில் யாருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது?
9. பொல்லாதவர்களைக் குறித்து என்ன அடையாதே, நியாயக்கேடுசெய்கிறவர்கள் மேல் என்ன கொள்ளாதே?
10. பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே என எழுதும் அப்போஸ்தலனும் மூப்பனுமானவன் யார்?

## வேதாகம ஆய்வு... 67

## தபீத்தாள்

## Tabitha

1. **தபீத்தாள் என்றால் மான் என்று அர்த்தம்**
2. **சீரிய பாஷையில் தபீத்தாள் என்று பெயர்**
3. **கிரேக்க பாஷையில் தொற்காள் என்று பெயர்**
4. **யோப்பா பட்டணத்தில் வசித்த தர்ம குணமுள்ள ஸ்திரீ – அப்.9:36**
5. **பேதுருவினால் உயிர் பெற்றாள் – அப்.9:40**



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

March
2024



என் ஆடுகள்
என் சத்தத்திற்குச்
செவிகொடுக்கிறது;
நான் அவைகளை
அறிந்திருக்கிறேன்,
அவைகள்
எனக்குப்
பின்செல்லுகிறது
யோவான் 10:27
2024

சகோதரர் பாலகுரு அவர்கள் மற்றும்
கும்பகோணம் பகுதியில் உள்ள புழுதிகுடியில் கூடிவரும் கிறிஸ்துவின் சபையார்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



கன்மலையில் (கிறிஸ்து) இஸ்ரவேலர் தண்ணீர் பருகிய இடம்

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan